செ.வெ. எண்: 490 நாள்: 28.7.2011

## சத்துணவுத் திட்டம் ஆய்வு

27.07.2011 அன்று காலை 11.00 மணியளவில் சென்னை சேப்பாக்கத்தில் அமைந்துள்ள சமூக நல இயக்கக கூட்ட அரங்கில் மாவட்டங்களின் சத்துணவு பொறுப்பு வகிக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி எல்லைக்கு பொறுப்பு வகிக்கும் உதவி கல்வி அலுவலர் ஆகியோரின் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்த தமிழக அரசு மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வின் போது சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்கவும் சத்துணவு மையங்களை சுகாதாரமான முறையில் வைத்திடவும், மற்றும் திட்டம் சிறப்பாக செயல்பட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தீவிரமாக திட்ட செயல்பாட்டினை கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார். இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு தமிழக அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை பொறுப்பு வகிக்கும் கூடுதல் தலைமை செயலர் அவர்கள் முன்னிலை வகித்து, இத்திட்டம் மேலும் சிறப்பாக நடைபெறுவதற்கும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு முடிக்கப்படாமல் உள்ள பணிகளை விரைந்து முடிக்க கேட்டுக் கொண்டார். முன்னதாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை இயக்குநர் வரவேற்றுப் பேசினார்.

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.